முருகப்பெருமான் துணை

**மகான் பரத்துவாசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.03.2024**, சனிக்கிழமை

1. ஞான வள்ளலாக வந்த அரங்கா
ஞானியே உன் பெருமை கூறி
தானதரும வழியை பின்பற்றி
தரணியோர் கரையேற வேண்டி
2. வேண்டியே துல்லிய ஆசிதனை
விளம்புவேன் சோபகிருது சேல் திங்கள்
உண்டான சூலதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 03 ம் நாள், 16.03.2024, சனிக்கிழமை)
உலகத்தில் பரத்துவாசர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி தயவுபட
ஞானவழி ஏற்று மக்கள்வர
நம்பகமுற ஞானிகள் ஆசி கூடி
4. கூடியே அறிவுத் தெளிவு திடம்
குவலயத்தில் வந்த நோக்கமும்
தேடிக்கண்டு முழுமை தன்னை
தேசிகன் வழிகாட்டலில் அடைய நேரும்
5. நேருமைபட வாழ வழிவகையும்
நிலவுலகில் பிறர் கருமாவை
பெருமைபட போக்கி பசிபிணி
பேதமான சகல இடரை கடக்க
6. கடக்க ஆற்றல்பட உதவி
கருணைமிக்க ஞானிகள் பலம்
அடைந்து தன் நிலை கூடி
அகிலத்தில் ஞானியை போல வாழ நேரும்
7. நேருமை நிறைந்த ஞான சமூகம்
நிலவுலகம் அடைய வேண்டி
ஆறுமுக அரங்கன் வகுத்த
அழியாமை தரும் ஞானம்

8. ஞானம் நடைமுறை ஆக
நல்ல நித்திய வழிகாட்டலாக
ஞானமாக வேதமாக ஏற்க
ஞாலமதில் எங்கும் ஞானபலம்

9. பலம்கொண்ட மக்களின்
படைகளாக மாறி நின்று
வலம்வரும் உலகில் நல் மாற்றம்
வள்ளல் நெறியாக சமூக மாற்றம்

10. மாற்றம் கூடி உலகினில்
மக்கள் தயவு வடிவாக
ஆற்றல் மிக்க ஞானத்தலைமை
அமைத்து கலியினில் ஞான ஆட்சி

11. ஞான ஆட்சி படைத்துமே
ஞானிகளும் வானவர்களும்
தானாகப் புவியில் இறங்கியருள
தருமஞானச் சூழல் அமைப்பர்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—